## மே - 27 - சனி

### புனித கன்டபரி அகஸ்தீன்

**“நீங்கள் என் பெயரால் தந்தையிடம் கேட்பதை எல்லாம் அவர் உங்களுக்குத் தருவார் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்.” யோவா. 16:23**

### முதல் வாசகம் : திருத்தூதர் பணி 18 : 23 – 28

பவுல் சிறிது காலம் அந்தியோக்கியாவில் செலவிட்டபின் அங்கிருந்து புறப்பட்டு ஒன்றன்பின் ஒன்றாகக் கலாத்தியா, பிரிகியா, பகுதிகள் வழியாகச் சென்று சீடர்கள் அனைவரையும் உறுதிப்படுத்தினார். அலக்சாந்திரியாவில் பிறந்த அப்பொல்லோ எனும் பெயருடைய யூதர் ஒருவர் எபேசு வந்தடைந்தார். அவர் சொல்வன்மை மிக்கவர் மறைநூல்களில் புலமை வாய்ந்தவர். ஆண்டவரின் நெறிகளைக் கற்றறிந்தவர் ஆர்வம்மிக்க உள்ளத்தோடு இயேசுவைப்பற்றிய செய்தியைப் பிழையற அறிவித்தும் கற்பித்தும் வந்தார். ஆனால் அவர் யோவான் கொடுத்த திருமுழுக்கை மட்டுமே அறிந்திருந்தார். அவர் தொழுகைக் கூடத்தில் துணிவுடன் பேசத்தொடங்கினார். அவர் பேசியதைக்கேட்ட பிரிஸ்கில்லாவும் அக்கில்லாவும் அவரை அழைத்துக் கொண்டுபோய், கடவுளின் நெறியைத் திட்டவட்டமாக விளக்கினார். அவர் அக்காயாவுக்குப் போக விரும்பியபோது சகோதரர் சகோதரிகள் அவரை ஊக்கப்படுத்தி, அவரை ஏற்றுக்கொள்ளுமாறு சீடருக்குக் கடிதம் எழுதினார்கள். அவர் அங்கே சென்றபோது இறையருளால் ஆண்டவரிடம் நம்பிக்கை கொண்டிருந்தவர்களுக்குப் பெரிதும் துணையாய் இருந்தார். ஏனெனில் அவர் வெளிப்படையாகவும் சிறப்பாகவும் யூதர்களிடம் வாதாடி, ”இயேசுவே மெசியா” என மறைநூல்களின் மூலம் எடுத்துக்காட்டினார்.

**பதில்பாடல் :** கடவுளே அனைத்துலகின் வேந்தர் நீரே

**நற்செய்தி :** யோவான் 16 : 23 – 28

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது:, “அந்நாளில் நீங்கள் என்னிடம் எதையும் கேட்கமாட்டீர்கள். நீங்கள் என் பெயரால் தந்தையிடம் கேட்பதை எல்லாம் அவர் உங்களுக்குத் தருவார் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். இதுவரை நீங்கள் என் பெயரால் எதையும் கேட்டதில்லை. கேளுங்கள் பெற்றுக் கொள்வீர்கள். அப்போது உங்கள் மகிழ்ச்சியும் நிறைவடையும். ”நான் உங்களிடம் உருவகமாகவே பேசிவந்துள்ளேன். ஆனால் காலம் வருகிறது. அப்போது உருவகங்கள் வாயிலாய்ப் பேசாமல், தந்தையைப்பற்றி வெளிப்படையாய் எடுத்துரைப்பேன். அந்நாளில் நீங்கள் என் பெயரால் வேண்டுவீர்கள். அப்போது ”உங்களுக்காகத் தந்தையிடம் கேட்கிறேன்” என நான் சொல்லமாட்டேன். ஏனெனில் தந்தையே உங்கள்மீது அன்பு கொண்டுள்ளார். நீங்கள் என்மீது அன்புகொண்டு, நான் கடவுளிடமிருந்து வந்தேன் என்று நம்புவதால்தான் தந்தையும் உங்கள் மீது அன்பு கொண்டுள்ளார். நான் தந்தையிடமிருந்து உலகிற்கு வந்தேன். இப்போது உலகைவிட்டுத் தந்தையிடம் செல்கிறேன்” என்றார்.

**தியானம் :** இயேசு நமக்காக மனிதனாகப் பிறந்து இவ்வுலகில் தமது பணிவாழ்வை மேற்கொண்டபோது, எந்தவொரு காரியத்தைச் செய்வதற்கு முன்னரும் தம் தந்தையிடம் வேண்டி அவர் சித்தத்தை அறிந்து அதன்படியே செயற்பட்டார் என அறிவோம். தமது தந்தையின் பெயரால் புதுமைகள் செய்யும்போது கூட அவர் தம் தந்தையிடம் வேண்டி அனைத்தையும் தந்தையின் பெயரின் புகழ்ச்சிக்காகவே செய்துவந்தார். அவர் தமது தந்தையின் சித்தத்தை செவ்வனே நிறைவேற்றி அதன் வழியாக சாவை வெற்றிகொண்டார். இப்போது தந்தையும், மகனும் வேறுவேறானவர்கள் அல்லர். தமது தந்தையின் மாட்சியிலும், அரசாட்சியிலும் சுதனும் பங்குகொள்கின்றார். எனவேதான் ‘இயேசுவே ஆண்டவர்’ என நாம் அறிக்கையிடுகின்றோம். இயேசுக்கிறிஸ்து வழியாகத்தான் நாம் தந்தையின் அன்பை முழுமையாகக் கண்டுகொண்டோம். நாம் இறைமகனை அறிந்துகொண்டால், தந்தையையும் அறிந்திருக்கின்றோம்: அவரை அன்பு செய்தால் தந்தையையும் அன்புசெய்கின்றோம்: அவர் வார்த்தையின்படி நடந்தால் தந்தையாம் கடவுளுக்கு நாமும் பிள்ளைகளாகும் உரிமையைப் பெறுகின்றோம். தமது பிள்ளைகளுக்குக் கடவுளும் தமது அருட்கொடைகளை நிறைவாகப் பொழிந்து அவர்களை வழிநடாத்தி வருவார் என்பதே இன்று நமக்குத் தரப்படும் உறுதிமொழியாகும். “இயேசுவே ஆண்டவர்: இயேசுவே மெசியா:” என எல்லா நாவும் அறிக்கையிடட்டும். ஆமென்.